குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்
(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 35–2015

அ.சா. **11**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. மணிகன்டன்<br>(SSI of police Bagalur PS) |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.கிருஷ்ணன் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| வயது | : | 48 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 18.05.2026 (எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை தொடர்ச்சி:–**

இவ்வழக்கில் முதல்கட்ட விசாரணை மேற்கொண்ட சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் 15.10.2014ம் தேதி காலை 08.30 மணிக்கு சாட்சிகள் சரவணன் மற்றும் முரளி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தார்.

**(ஏற்கனவே அ.சா.9 மூலம் மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுவதாக முதல் விசாரணையில் பதிவு செய்யப்பட்டு ஆவணத்தில் மாதிரி வரைப்படம் குறியீடு செய்யப்படுவதற்கு பதிலாக பார்வை மகஜரில் அ.சா.4 ஆக குறியீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது).** எனவே, இன்று பார்வை மகஜர் மட்டும்

அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பிறகு வழக்கின் மேல் விசாரணையை காவல் ஆய்வாளர் மனோகரன் என்பவரிடம் ஒப்படைத்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

இந்த வழக்கில் நான் புலன்விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலம் 15 யில் முதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பட்ட தேதி மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் நேரம் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். வரைப்படத்தில் சம்பவ இடத்திற்கு அருகில் Global Steel Pipe கம்பெனி உள்ள நபர்கள் மற்றும் பாலாஜி நகரை சேர்ந்த யாரையும் இவ்வழக்கில் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். புகாரில் தங்க தாலி என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அதன் மாடல் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். இவ்வழக்கின் முதல் கட்ட விசாரணை மேற்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் தயார் செய்த சில ஆவணங்களில் மட்டுமே தேதி குறிப்பிட்டுள்ளார் என்றாலும் சில ஆவணங்களில் தேதி குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். நான் முதல் விசாரணை யில் சொன்னபடி சொன்ன நாள் நேரத்தில் எந்த ஒரு சம்பவமும் நடைப்பெறவில்லை என்றாலும் எந்த புகார் மனுவும் வழங்கப்படவில்லை என்றாலும் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்யவில்லை என்றாலும் எதிரியின் மீது பொய்யான வழக்கு பதிவு செய்து உள்ளார்கள் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /–ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**